முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**சோபகிருது வருடம் ஆடி மாதம் 28 திகதி முதல்**

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 03 திகதி வரை**

**(13.08.2023 ஞாயிறு முதல் 20.08.2023 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கலி இடர்களை வெல்லவே
   கந்த வேலன் அவதாரமாக
   அழியாமை பெற்று வந்தநல்
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
2. ஞானியே உன்நோக்கம் வென்று
   ஞானிகள் ஆட்சிக் காலம்
   இனிமேல் மாற்றம் கண்டடைய
   இனிதே அரங்கனுன் பெருமைகூறி
3. கூறியே இந்தியா தமிழகம் தன்னில்
   குறைவிலா சோபகிருது நள்ளிதிங்கள்
   இருபாணெண் திகதிமேல் யாளிதிங்கள்
   இயம்பிட சூல திகதிவரை நடக்கும்
4. நடக்கும் நிகழ்வாக வருங்கால
   நற்பலன் குறித்த ஆசிதனை
   தடையற அகத்திய மகரிஷியும் உரைப்பேன்
   தக்கபடி கலியின் கட்டமாக
5. ஆகவே சமூக அவலமாக
   அணுகிடும் சாதிவெறி இழிவான
   வகையிலா மங்கையர்க்கான கொடுமை
   வதம் செய்யும் சாபமாக தேசத்தையே

6. அய்யம் கொள்ளா ஆளுமைகள்
அலட்சியம் கொண்டு நின்றால்
மெய் அழிந்து பொய்மை மிகுந்து
மன்னருக்கும் மக்களுக்கும் அழிவு நேரும்
7. நேருமை கொண்டு ஆளுமைகள்
நீதி கரங்கள்பட முடிவுகளை
வருங்காலம் நிகழா வண்ணம்
வதை செய்ய வேண்டும் தீவினையாளர்களை
8. அவர்களை பாதுகாக்க என்னும்
ஆளுமை சிறுமை காணும்
அவனியில் வாக்கு வலிமை எண்ணி
அநீதியோடு துணையும் அனுமதியுமாக
9. ஆகவே தொடர்ந்தால் உலகினில்
அவப்பேரு களங்கம் பற்றி
வகையிலா ஆளுமை என
வல்லமை நல்மதிப்பும் யாவும்இழந்து
10.இழந்து வருங்காலம் அரசியலில்
இல்லாமலே முடிவுகாண நேரும்
களங்கமற கருணைபட ஆளுமை
களம் காணவே நல்ஆட்சியாக மலரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆடி மாதம் 28ம் நாள் 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் சோபகிருது வருடம் ஆவணி மாதம் 03ம் நாள் 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

கலியுகத்தின் துன்பங்களை வென்று மக்களை காத்து இரட்சித்து கடைத்தேற்றிடவே சர்வ வல்லமை மிக்க முருகப்பெருமானின் அவதாரமாக அவதரித்து அழிவிலாத நிலையை பெற்று உலகினில் அவதரித்திட்ட ஆறுமுக அரங்க மகா ஞானியே உமது அவதார நோக்கம் வெற்றி அடைந்து ஞானிகளின் தலைமையில் இவ்வுலகினில் இனி வரும் காலம் ஞான ஆட்சி

காலமாக உருவாகிட ஆசி கூறி பெருமை மிக்க அரங்க மகானின் பெருமைகளையும் உலகறிய கூறியே இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் ஆடி மாதம் **28**ம் நாள் **13.08.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் **03**ம் நாள் **20.08.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

கலியுகத்தின் துன்பங்களாக இவ்வுலகினை அச்சுறுத்தும் சாதி வெறியும் இழிசெயலான பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளும், அநீதிகளும் அதிகமானால் அது சாபமாக மாறி இந்த தேசத்தினை அழித்து விடும் அபாயம் இருந்த போதும் நாட்டினை வழி நடத்தி ஆட்சி புரிவோர் இனிமேலாகினும் தக்க முறையில் செயல்பட்டு கட்டுப்படுத்தாமல் பயமின்றி அலட்சியமாக நடந்து கொண்டால் உண்மைக்கு மதிப்பில்லாமல் போய் உண்மை மறைந்து பொய் மிகுந்து நாட்டை ஆள்பவருக்கும் நாட்டு மக்களுக்கும் அழிவு நேர்ந்திடுமப்பா.

ஆதலினாலே நேர்மைபட நடந்து நீதியின் துணை கொண்டு சட்டங்களை தகுந்த விதத்தில் உருவாக்கி இனிவரும் காலங்களில் கொடுமைகள் நிகழாதவாறு காத்து நீதியின் முன் தண்டிக்கப்பட வேண்டியவர்களை பாதுகாக்க எண்ணுகிறவர்கள் தாழ்வான நிலையை அடைந்திட நேருமப்பா.

வாக்குகள் பெற்று வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தை மட்டும் கருத்தில் கொண்டு தவறு செய்தவர்களுக்கும், அநீதி புரிபவர்களுக்கும் துணை நிற்பதும், அவர்களுக்கும் அவர்களது செயல்களுக்கும் அனுமதி அளிப்பதும் தொடர்ந்து நடந்து வந்தால் உலகினில் அவர்களுக்கும் துணை நிற்பவர்களுக்கும் களங்கம் உண்டாகும். ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள் வல்லமை இழப்பார்கள், நல்மதிப்பும் இல்லாமல் போய் வருங்காலங்களில் அவர்கள் அரசியல் வாழ்வு இல்லாமல் போகும் நிலையும் உண்டாகுமப்பா. ஆதலினாலே களங்கமற்றவர்களாய் நடந்து கருணையுடன் ஆட்சி புரிய மக்களை காத்து வர நாட்டினில் நீதி குன்றா நல்லாட்சி மலர்ந்திடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

—சுபம்—